## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
## 16 அக்டோபர் 2015 / 03 முஹர்ரம் 1436
## <u>சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களின் ஹிஜ்ரத் மூலம் பெற வேண்டிய பாடங்கள்</u>

الْحَمْدُ للهِ الَّذِي جَعَلَ الشَّمْسَ ضِيَاءً وَالْقَمَرَ نُوْرًا، وَأَنْزَلَ الْقُرْآنَ
لِلْمُتَّقِيْنَ ذِكْرًا، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَنَّ
مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى
آلِهِ وَأَصْحَابِهِ صَلاَةً وَسَلاَمًا دَائِمَيْنِ إِلَى يَوْمِ تَجِدُ كُلُّ نَفْسٍ مَا
عَمِلَتْ مُحْضَرًا .أَمَّا بَعْد، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும் அவன் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமும் அல்லாஹ்வின் மீதான ”தக்வா” எனும் பக்தியை உறுதி செய்து கொள்ள கடின முயற்சி செய்வோமாக! ”தக்வா” வின் உணர்வு நமக்கு முடிவில்லா மகிழ்ச்சியையும் வளங்களையும் வழங்குவதாகும்.

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் கிருபையால் நாம் ஹிஜிரி ஆண்டின் புதிய ஆண்டாகிய 1437-வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இது போன்ற காலங்களில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா நகருக்குச் செய்த "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணத்தை நாம் நினைவு கூர்வது வழக்கம். மேலும், "ஹிஜ்ரத்" நிகழ்ச்சியை வெற்றி பெறச் செய்வதற்காக முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸாரிகள் செய்த தியாகங்களையும் ஒவ்வொரு ஆண்டும் நாம் நினைவூட்டப்பட்டு வருகிறோம். எனினும், அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்கள் அல்லாத, நபி(ஸல்) அவர்களின் மற்ற சில தோழர்கள் செய்த "ஹிஜ்ரத்" வரலாற்று நிகழ்ச்சிகளும் உள்ளன. அவ்வரலாற்று நிகழ்ச்சிகளிலும் நாம் பின்பற்றத்தக்க மிகச் சிறந்த பல பாடங்களும் முன்மாதிரிகளும் உள்ளன.

அவ்வரலாறுகளில் ஒன்று, நபித் தோழர் சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களின் வரலாறு ஆகும். இத்தோழர், ஈரான் நாட்டில், நெருப்பை வணங்கிக் கொண்டிருந்த "சௌராஸ்டிரா" குடும்பத்தில் பிறந்தார். இளம் வயதிலிருந்தே இவரது பெற்றோர் இவருக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தார்கள். அதுதான், எந்நேரமும் நெருப்பை அணைய விடாமல் எரிந்துக் கொண்டிருப்பதைக் கண்காணிப்பதாகும்.

ஒரு நாள், சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்கள் கிறிஸ்தவக் கோவில் ஒன்றில் கிறிஸ்தவர்கள் வணங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர்களின் கிறிஸ்தவ மதத்தால் கவரப்பட்டார். அவரது தந்தை, அவர் வீட்டை விட்டு வெளியேறியதை அறிந்து கோபமடைந்தார். எனவே, வீட்டை விட்டு வெளியேறாத வண்ணம் சங்கிலியால் சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களை வீட்டில் கட்டிப் போட்டார். எனினும், சல்மான் அல்-பார்சி

(ரலி) அவர்கள் எப்படியோ வீட்டை விட்டு தப்பித்து, சிரியா நாட்டை அடைந்தார். சிரியாவில் ஒரு கிறிஸ்தவப் பாதிரியாருக்கு, அப்பாதிரியார் இறக்கும் வரை பணிவிடை செய்து வந்தார். எனவே, அவர் மற்றொரு பாதிரியாருக்குப் பணிவிடை செய்தார். அவரும் இறந்து விட்டார்.

இவ்வாறு, ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்கு அடிக்கடி இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டதால், பல ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பையும், பல பாதிரிகளுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தையும் சல்மான் அல்-பார்சி (ரலி) பெற்றார்கள். இப்பயணங்களையெல்லாம் உண்மையைத் தேடுவதற்காக அவர்கள் செய்தார்கள். இறுதியில், அரபு நாட்டில் ஒரு இறைத்தூதர் தோன்ற இருக்கின்றார்; அவர் இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்களால் கொண்டுவரப்பட்ட தூதை மக்களுக்குப் போதிக்க இருக்கின்றார் என்ற தகவல் சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களுக்குக் கிடைத்தது. எனினும், எந்த நகரில் அந்த இறைத்தூதர் தோன்ற இருக்கின்றார் என்று அவர்கள் கேள்விப்பட்டார்களோ அந்த மதீனா நகருக்கு சல்மான் அல்-பார்சி (ரலி) சென்றுக் கொண்டிருந்த போது சில ஜனங்களால் அவர் ஏமாற்றப்பட்டார். அவர்கள் ஒரு அடிமையாக ஒருவரிடம் விற்கப்பட்டார்கள். எனினும், சல்மான் அல்-பார்சி (ரலி) யிடம் உறுதியான உணர்வுகள் காணப்பட்டதால், இறுதியாக ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களைச் சந்தித்து, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஜமாஅத்தார்களே!

இவ்வாறு தான் நாமும் இருக்க வேண்டும். மகிழ்ச்சியையும் வெற்றியையும் அடைவதற்கான நமது முயற்சியை ஒருபோதும் கைவிட்டு

விடக் கூடாது. சிலவேளைகளில், சந்தர்ப்ப சூழ்நிலைகள் நமக்குச் சாதகமாக இல்லை என நாம் கருதினாலும், நாம் அலைகளை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கின்றோம் எனக் கருதினாலும், உலகமே நமக்கு வெளிச்சமில்லாமல் இருட்டாகத் தென்பட்டாலும் நமது முயற்சியை நாம் விட்டு விடக் கூடாது. அந்நேரங்களில், "ஈமான்" எனும் இறை நம்பிக்கையைப் பற்றிப் பிடித்து, அதனை நமது பலமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். எவர்கள், தமது நிலைகளை தாமாக மாற்றிக் கொள்ளவில்லையோ அல்லாஹ் அவர்களின் நிலையை மாற்றுவதில்லை என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறவில்லையா?

சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்கள் எந்த அளவு உறுதியான தீர்மானத்துடன் இருந்துள்ளார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்வது அக்காலத்தில் எளிதாக இல்லாதிருந்தும் கூட அவர்களிடம் காணப்பட்ட உயிரோட்டம் மங்கிவிடவில்லை. உண்மையைத் தேட வேண்டுமென்பதில் அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டதால், அவர்கள் அடிமையாக ஆக்கப்பட்ட போதிலும், தான் பிறந்த ஊருக்கோ, தனது பழைய மார்க்கத்துக்கோ அவர்கள் திரும்பி விடவில்லை. உள்ளங்கள், நல்ல விஷயங்கள் இன்றி வெற்றிடமாக இருக்கும் போது, அவை இருளால் நிரப்பப்பட்டிருக்கும் நிலையில், சுகமாக வாழ்வதில் என்ன பயன் இருக்கும்! மறுபுறம், நமது உள்ளங்கள், அல்லாஹ்வை நம்புவதில் உள்ள "நிஃமத்" (அருளை) சுவைத்தால் நமது வாழ்க்கையில் எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் அவற்றை நாம் தைரியமாகவும் பலமாகவும் எதிர்கொள்ள முடியும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-அன்ஃபால்" எனும் அத்தியாயத்தின் 74-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَهَاجَرُوا۟ وَجَٰهَدُوا۟ فِى سَبِيلِ ٱللَّهِ وَٱلَّذِينَ ءَاوَوا۟
وَّنَصَرُوٓا۟ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْمُؤْمِنُونَ حَقًّا ۚ لَّهُم مَّغْفِرَةٌ وَرِزْقٌ كَرِيمٌ ﴿٧٤﴾

பொருள்: மேலும், எவர்கள் இறை நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து அல்லாஹ்வின் வழியில் போராடினார்களோ அவர்களும், எவர்கள் தஞ்சம் அளித்து உதவி புரிந்தார்களோ அவர்களும்தாம் உண்மையான இறைநம்பிக்கையாளர்களாவர். அவர்களுக்குப் பாவமன்னிப்பு இருக்கிறது. மேலும் நற்பேறுகளும் இருக்கின்றன.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் பத்ரு, உஹது போன்ற பிரபல்யமான போர்களில் அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. காரணம், அப்போதும் அவர்கள் அடிமையாகவே இருந்தார்கள்.

எனினும், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியதாலும், நபித்தோழர்கள் உதவி செய்ததாலும், சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களால் தன்னைத் தானே அடிமைத் தனத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடிந்தது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பாதையில் மிகப் பெரிய அளவில் பங்காற்றிய பிரபல்யமான நபித் தோழர்களில் ஒருவராக அவர்கள் ஆனார்கள். "கந்தக்" எனும் போரில் சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்கள் முக்கியப் பங்காற்றினார்கள். அப்போரின் போது எதிரிகள் மதீனாவில் நுழைவதை விட்டும் தடுப்பதற்காக மதீனாவைச்

சுற்றி அகழ் தோண்டுமாறு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கு சல்மான் அல்-பார்சி (ரலி) ஆலோசனை வழங்கினார்கள். அவர்களின் இந்த ஆலோசனை மிகவும் பயனளித்தது. அதன் காரணமாக, விரோதிகள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. அவர்களின் உணர்வுகள் நசுக்கப்பட்டு, ஏமாற்றமடைந்தார்கள். சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களின் அறிவாற்றல் இந்த அளவு சிறப்பாக இருந்தது. அவர்கள் அனைவராலும் போற்றப்பட்டார்கள்; நேசிக்கப்பட்டார்கள்.

ஜமாஅத்தார்களே!

சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களின் வரலாற்றை நாம் சிறந்த முன்மாதிரியாகவும், உத்வேகத்தின் மூலமாகவும் அமைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களால் எப்போதும் போற்றப்பட்டார்கள். மற்ற தோழர்களால் அதிகம் உயர்வாகக் கருதப்பட்டார்கள். இச்சிறப்பு அவர்களுக்கு அவர்களின் பரம்பரையின் காரணமாகவோ செல்வத்தின் காரணமாகவோ கிடைத்ததல்ல. உண்மையில், அவர்கள் ஒரு அடிமையாக மதீனாவுக்கு வந்தார்கள். ஒருவரது உள்ளத்தில் காணப்படும் ”தக்வா” மற்றும் அவரது முயற்சிகளில் காணப்படும் தூய்மை போன்றவற்றின் காரணமாகவே அவருக்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா சிறப்புத் தன்மையை வழங்குகிறான். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

مَنْ تَوَاضَعَ لِلَّهِ دَرَجَةً يَرْفَعْهُ اللَّهُ دَرَجَةً ، حَتَّى يَجْعَلَهُ فِي أَعْلَى عِلِّيِّينَ ، وَمَنْ يَتَكَبَّرْ عَلَى اللَّهِ دَرَجَةً ، يَضَعْهُ اللَّهُ دَرَجَةً ، حَتَّى يَجْعَلَهُ فِي أَسْفَلِ السَّافِلِينَ.

பொருள்: எவரொருவர், அல்லாஹ்வுக்காக தனது அந்தஸ்த்தை ஓரளவு தாழ்த்திக் கொள்கிறாரோ அவரது அந்தஸ்த்தை அல்லாஹ் உயர்த்துவான். அல்லாஹ்வின் பார்வையில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்களில் ஒருவராக அவரை அல்லாஹ் ஆக்குவான். எவரொருவர் அல்லாஹ்வின் விஷயத்தில் பெருமை கொள்கிறாரோ அவரது அந்தஸ்த்தை அல்லாஹ் தாழ்த்தி விடுவான். அவரை ஆக தாழ்ந்த ஜனங்களில் ஒருவராக ஆக்கி விடுவான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் இப்னு மாஜா ரஹ், இமாம் இப்னு ஹிப்பான் ரஹ்)

எனவே, ஜமாஅத்தார்களே!

இஸ்லாமும் ஈமானும் நம்மை ஒன்றிணைப்பதாக இருக்க வேண்டும். நம்மிடம் காணப்படும் மொழி, கலாச்சாரம், இனம், பரம்பரை போன்ற வேற்றுமைகள் நம்மைப் பலஹீனப்படுத்துவதாக ஆகி விடக் கூடாது.

ஈரான் நாட்டைச் சேர்ந்தவரான செய்யிதினா சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்கள் அரபியர்களுக்கிடையே வாழ்ந்த போதிலும் அவர்கள் தனிமையை உணரவில்லை. அவர்களின் சமூகத்தினரால் வித்தியாசமாகப் பார்க்கப்படவில்லை. சல்மான் அல்-பார்சி (ரலி) அவர்களும் பின்வாங்கவில்லை; தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில்

தயங்கவில்லை. இஸ்லாத்தைப் பரப்புவதில் மற்ற தோழர்கள் செய்த முயற்சிகளில் பங்கு கொண்டு அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

இதுதான் தற்கால முஸ்லிம் சமூக மக்களிடம் காணப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். அவர்கள் ஒருங்கிணைந்து சமுதாயத்துக்குப் பங்காற்ற வேண்டும். விளிம்பு நிலைக்கு நம்மை நாம் தள்ளிக் கொள்ளாத வரை மற்றவர்கள் நம்மை ஒருபோதும் விளிம்பு நிலைக்குத் தள்ள முடியாது. நம்மை நாம் தனிமைப்படுத்திக் கொள்ளாத வரை, மற்ற சமூக மக்களை விட்டும் நம்மை நாம் பிரித்துக் கொள்ளாத வரை, நாடு, அதிலுள்ள மக்கள் மற்றும் சர்வதேச மக்களின் நலனுக்காக நாம் பங்களிப்புச் செய்யும் வரை, எவரும் நமது ஆலோசனைகளை சிறுமைப்படுத்திட முடியாது. நமது கருத்துக்களை மதிப்பற்றவை என வாதிட முடியாது.

நமக்கு மத்தியில் பல வேற்றுமைகள் காணப்பட்ட போதிலும் நாம் தோளோடு தோளாக இணைந்து செயல்படுவதற்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அருள் புரிவானாக! இஸ்லாத்தைப் பரப்புவதற்காக சல்மான் அல்-பார்சி (ரலி) முதற்கொண்டு, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் மற்ற தோழர்கள் அனைவரும் செய்த முயற்சிகளின் உணர்வுகள் நம்மிடம் இறுதி நாள் வரை பசுமையாக காணப்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.